Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 09-04-2026
Deposition of witness for : PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணன் | வயது | : | 25 |
| தந்தை பெயர் | : | மாலையா | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | இந்திரா நகர், விளார் ரோடு, தஞ்சாவூர் | தொழில் | : | டைல்ஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

**Ld. D. Counsel Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன்.

2) அ.சா.1,2,3,4,5 ஆகியோர்களை தெரியும்.இறந்துபோன சசிக்குமாரை தெரியும்.

3) 9.9.2025 ம் தேதி காலை 11, 11.30 மணியளவில்வேலையை முடித்துவிட்டு சம்பளம்

வாங்குவதற்காக கலைஞர் நகர் 2 வது தெரு குறுக்கு ரோட்டில் நடந்து செல்லும்போது 5 பசங்க அருவாள் கத்தியுடன் ரத்தக்கரையுடன் ஓடி வந்தார்கள். அவர்கள் நம்ம ஏரியா பசங்கதானே என்று 1வது தெருவுக்கு போனேன். ஒரே கூட்டமாக கதறி அழுதுகொண்டிருந்தார்கள். அங்கு சசிக்குமார் ரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

4) அப்போது போலிசார் வந்திருந்தார்கள். சக்தி, கோகுல், பிரபாகரன், சஞ்சய், சபரி ஆகியோர்கள் ஓடினார்கள்.

5) சக்தி, கோகுல், பிரபாகரன், சஞ்சய், சபரி ஆகியோர்கள் நீதிமன்றத்தில் தற்போது உள்ளார்கள். அவர்களை அடையாளம் சொல்லமுடியும். ஆஜர் எதிரிகளின் வரிசையில் 3 வதாக நிற்பவர் பிரபாகரன். ( நீதிமன்றம் 3 வதாக நிற்கும் நபரை உன்னுடைய பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் பிரபாகரன் என்று கூறினார்.) ஆஜர் எதிரிகளின் வரிசையில் 4 வதாக நிற்பவர் சக்தி. ( நீதிமன்றம் 4 வதாக நிற்கும் நபரை உன்னுடைய பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் ஹரிஹரன் என்று கூறினார்.) ஆஜர் எதிரிகளின் வரிசையில் 5 வதாக நிற்பவர் கோகுல். ( நீதிமன்றம் 5 வதாக நிற்கும் நபரை உன்னுடைய பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் கோகுல் என்று கூறினார்.) ஆஜர் எதிரிகளின் வரிசையில் 6 வதாக நிற்பவர் சபரி. ( நீதிமன்றம் 6 வதாக நிற்கும் நபரை உன்னுடைய பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் சபரீஸ்வரன் என்று கூறினார்.) ஆஜர் எதிரிகளின் வரிசையில் 2 வதாக நிற்பவர் ராஜா என்ற சஞ்சய். ( நீதிமன்றம் 2 வதாக நிற்கும் நபரை உன்னுடைய பெயர் என்று கேட்டதற்கு அவர்

தன்னுடைய பெயர் சஞ்சய் என்று கூறினார்.)

6) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

12 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்ய இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதனால் மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பிறகு 12 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது)

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.09 19:11:30 +0530